சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.84/2024</u>

28.10.2025

வா.சா.1 திருமதி. ஜெயந்தி, க/பெ. கலைச்செல்வன்

<u>**1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எனக்கு திருமணமாகி 30 வருடம் ஆகிறது. 2 ஆம் வாதி கஸ்தூரிக்கு திருமணமாகி 20 வருடங்களாகிறது. மோகனின் வாரிசுகள் 5,6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் எதனால் இறந்தார் என்று எனக்கு தகவல் சொல்லவில்லை. இறந்த விவரத்தை சொல்லாததால் காரியத்திற்கும் செல்லவில்லை. எனது தகப்பனார் உயில் எழுதிவைத்த விவரம் எப்போது தெரியவந்தது என்றால் சுமார் 5,6 மாதங்களுக்கு முன்புதான் தெரிந்தது. உயில் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. உயில் எந்த சொத்தை பொறுத்து எழுதியுள்ளார் என்று தெரியாது. எனது தகப்பனார் செட்டில்மெண்ட் எழுதிவைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் 2 ஆம் வாதிக்காகவும் சேர்த்து சாட்சியமளிக்கின்றேனா என்றால் ஆமாம். முதல்விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவாபடி எனக்கு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனாரை ஏமாற்றி சொத்தை எழுதிவாங்கியுள்ளார்கள்.

2, 5, 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்ததன் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.